இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 87 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 19 – ஞாயிற்றுக்கிழமை 05 நவம்பர் 2023 – கோவை ★★ 8 + 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 87: Thiruvalluvar Year - 2054 - Ayppasi 19 - Sunday 05 November 2023 - Kovai ★★ 8+8 Pages ₹5.00

## இலங்கைப் பொருளாதாரத்தில் மகத்தான மாற்றத்தை உருவாக்கியவர்கள் தமிழர்கள்! அவர்களது துயர்துடைக்க கழகம் எப்போதும் குரல் கொடுக்கும்!

# மலையகத் தமிழர்களின் நீதியும், உரிமையும் நிலைநாட்டப்பட வேண்டும்!

## இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்கள் இலங்கைக்குச் சென்று 200 ஆண்டுகள் ஆவதை நினைவுகூரும் “நாம் 200” என்ற தேசிய நிகழ்வில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துரை!

சென்னை,நவ.5-

**இலங்கைப் பொருளாதாரத்தில் மகத்தான மாற்றத்தை உருவாக்கியவர்கள் தமிழர்கள்! அவர்களது துயர்துடைக்க கழகம் எப்போதும் குரல் கொடுக்கும்! என்றும், மலையகத் தமிழர்களின் நீதியும், உரிமையும் நிலை நாட்டப்பட வேண்டும்! எனவும், இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்கள் இலங்கைக்குச் சென்று 200 ஆண்டுகள் ஆவதை நினைவுகூரும் “நாம் 200” என்ற தேசிய நிகழ்வில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துரையில் தெரிவித்துள்ளார்.**

இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்கள் இலங்கைக்குச் சென்று 200 ஆண்டுகள் (1823 - 2023) ஆவதை நினைவுகூரும் வகையிலும், அவர்கள் இலங்கைக்கு ஆற்றிய சேவைகளையும், இலங்கையின் பொருளாதாரத்துக்கு வழங்கிய பங்களிப்பைப் பாராட்டியும் இலங்கை மத்திய அரசாங்கத்தின் பங்களிப்புடன் இலங்கை அமைச்சர் திரு. ஜீவன் தொண்டமான் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ‘நாம் 200’ என்ற தலைப்பிலான தேசிய நிகழ்வில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி வாயிலாக வழங்கிய வாழ்த்துரை வருமாறு:-

அனைவருக்கும் வணக்கம்!

இலங்கையில் வாழும் மலையகத் தமிழ் மக்களின் வாழ்வு என்பது 200 ஆண்டுகளை எட்டுகிறது. இரண்டு நூற்றாண்டுகாலமாக தனிப்பெரும் இனமாக வாழ்ந்துவரும் மலையகத் தமிழ் மக்களுக்கு எனது வாழ்த்துகள்!

இந்த நிகழ்ச்சியில் நான் காணொலி மூலமாக உரையாற்ற வேண்டும் என வேண்டுகோள் விடுத்த அருமை சகோதரர் ஜீவன் தொண்டமான் அவர்களுக்கு எனது நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

### காடுகளை தோட்டங்களாக மாற்றிய மலையகத் தமிழர்கள்!

மனிதன் வாழ்ந்திராத மலைக் காடுகளை மலையகத் தோட்டங்களாக மாற்றியவர்கள் மலையகத் தமிழர்கள்! மலையகத் தமிழ்த் தொழிலாளர்களின் வரலாறு இலங்கையில் காப்பி பயிர் செய்யப்பட்ட ஆரம்பகாலம் முதல் தொடங்குகிறது.

1823ஆம் ஆண்டு கம்பளைக்கு அருகே உள்ள சிங்கபிட்டிய என்ற கிராமத்தில் கேப்டன் ஹென்றி பேட் என்ற பிரிட்டிஷ்காரர், 14 இந்தியத் தொழிலாளர்களையும் சில சிங்களத் தொழிலாளர்களையும் வைத்து காப்பித் தோட்டம் தொடங்கினார். இது இலங்கைப் பொருளாதாரத்தில் மகத்தான மாற்றத்தை உருவாக்கியது.



காப்பித் தோட்டங்கள் பெருகப்பெருக இந்தியத் தொழிலாளர்கள் ஏராளமாக இலங்கைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். காப்பி தோட்டத்தையடுத்து தேயிலைத் தோட்டங்கள் அதிகமானது. அதனையும் மலையகத் தமிழர்கள் வளப்படுத்தினார்கள். பின்னர் ரப்பர், தென்னை என அனைத்துப் பணப் பயிர்களது உற்பத்தியும் மலையகத் தமிழர்களது உழைப்பால் உருவானதுதான்.

### 200 ஆண்டுகளாக இலங்கையில் மகத்தான பங்களிப்பை வழங்கும் தமிழர்கள்!

பயிரிடப்படாத நிலத்தை பயிரிட்டும் காடுகளாக இருந்த நிலத்தை காசுப் பயிர்களாக விளைவித்தும் பின்தங்கிய பொருளாதாரத்தை முன்னணி பொருளாதாரமாக ஆக்கியவர்கள் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள்! இப்படி கடந்த 200 ஆண்டுகளாக இலங்கையின் நல்வாழ்வுக்கு மகத்தான பங்களிப்பை வழங்கியுள்ளனர். இன்னமும் வழங்கி வருகின்றனர்.

அதாவது இலங்கை நாட்டுக்காக தங்களது உழைப்பை வழங்கியவர்கள் மலையகத் தமிழர்கள். இலங்கை நாடு உயர உழைத்தவர்கள். தங்களது ரத்தத்தையும் வியர்வையையும் காலத்தையும் கடமையையும் அந்த நாட்டுக்காகவே ஒப்படைத்தவர்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய காலம்முதல் புலம்பெயர் தமிழர்களது உரிமையைக் காப்பதில் கண்ணும் கருத்துமாகச் செயல்பட்டுள்ளது.

### வெளிநாடுவாழ் தமிழர்களுக்கு எப்போதும் குரல் கொடுக்கும் கழகம்!

1952ஆம் ஆண்டு தி.மு.க.வின் முதல் மாநில மாநாட்டில் பேசும்போது பேரறிஞர் அண்ணா அவர்கள், “இலங்கை வாழ் திராவிட மக்களுக்காக ஓட்டு உரிமையைக் கொடுத்து நீதியை நிலைநிறுத்துங்கள். ஜனநாயகத்தைக் கேலி செய்யாதீர். வீண் போக்கு வெற்றியைத் தராது” என்று பேசினார்.

தி.மு.க.வின் இரண்டாவது மாநில மாநாட்டில் தனி தீர்மானமே நிறைவேற்றப்பட்டது. 1957 தேர்தல் அறிக்கையில், தமிழர்கள் நிறைந்துள்ள வெளிநாடுகளில், தமிழர்களே தூதுவர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்று தி.மு.க. கோரியது. இப்படி தமிழ் மக்களது உரிமைகளுக்காக ஆரம்பகாலம் முதல் குரல் கொடுக்கும் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்.

“கடல் நீர் உப்பாக இருப்பது ஏன்? அது கடல் கடந்த தமிழர்களின் கண்ணீரால்!” என்று எழுதினார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

மலையகத் தமிழர்கள் தமிழ்நாட்டிற்கு திரும்பியபோது அவர்களை அரவணைத்து தமிழக மலைப்பகுதிகளில் குடியமர்த்தி TANTEA, அரசு ரப்பர் தோட்டங்கள் மூலம் அவர்கள் வாழ்வில் உயர வழிவகை செய்தோம்.

### தொப்புள்கொடி உறவுகளுக்கு தமிழ்நாடு என்றும் துணை நிற்கும்!

அந்த உணர்வோடுதான் அனைத்துப் பிரச்சினைகளையும் அணுகி துயர் துடைக்கும் பணிகளில் நாங்கள் ஈடுபட்டு வருகிறோம். உரிமை காக்கவும் உதவிகள் செய்து வருகிறோம். அந்த வகையில், மலையக தமிழ் மக்களின் நீதியும் உரிமையும் நிலைநாட்டப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மலையக தமிழர்களின் குழந்தைகளின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். இலங்கையில் வாழும் அனைத்து மக்களையும் போல கல்வியிலும் பொருளாதார முன்னேற்றத்திலும் அவர்கள் மேலெழும்பும் காலத்தை எதிர்நோக்கி தமிழ்நாடு காத்திருக்கிறது. கல்வி, சுகாதாரம், வாழிட உரிமைகள், பொருளாதார உதவிகள், சமூக உரிமைகள் அனைத்தும் வழங்கப்பட வேண்டும்.

நாட்டை வாழ வைத்த மக்களை வாழ வைக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். அதற்காக தொப்புள் கொடி உறவுகளான தமிழ்நாடு என்றும் குரல் கொடுக்கும். நன்றி. வணக்கம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.



‘நீட் விலக்கு நம் இலக்கு’ என்ற குறிக்கோளுடன் 50 லட்சம் கையெழுத்து பெறுவதன் ஒரு பகுதியாக, கழக இளைஞரணி செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் சத்தியமூர்த்தி பவனுக்குச் சென்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே.எஸ்.அழகிரி அவர்களிடம் கையெழுத்துப் பெற்றார். சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் செல்வப் பெருந்தகை மற்றும் கே.வி.தங்கபாலு, கிருஷ்ண சாமி, பீட்டர் அல்போன்ஸ் உள்ளிட்ட காங்கிரஸ் முன்னணித் தலைவர்களும் அதற்கான அட்டையில் கையெழுத்திட்டனர்.

## நீட் விலக்கு நம் இலக்கு: சென்னையில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே.எஸ்.அழகிரி மற்றும் முன்னணித் தலைவர்களிடம் கையெழுத்து!

# மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தலைவர்களிடம் கையெழுத்து!

## இளைஞரணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!

சென்னை, நவ.5 -

சென்னையில், தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.எஸ்.அழகிரி மற்றும் காங்கிரஸ் மூத்த நிர்வாகிகளிடம் நீட் தேர்வுக்கு எதிராக சத்தியமூர்த்தி பவனில் கையெழுத்துகளைப் பெற்றார்.

பின்னர், செய்தியாளர்களைச் சந்தித்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கூறியதாவது:-

“நீட் தேர்வுக்கு விலக்கு அளிக்கக் கோரி 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்துகளைப் பெற்று, சேலம் இளைஞரணி மாநாட்டில் அதை சமர்ப்பித்து, குடியரசுத் தலைவருக்கு அதை அனுப்பி வைப்பதுதான் எங்களுடைய இலக்கு. ஆன்லைன் வழியாக தங்களது கையெழுத்தைப் பதிவு செய்யலாம். இதுவரை, 3 லட்சம் கையெழுத்துகளைப் பெற்றுள்ளோம்.

அதுபோல், 10 லட்சம் அஞ்சல் அட்டைகள் அச்சிடப்பட்டு, இதுவரை 8 லட்சம் அஞ்சல் அட்டைகளில் கையெழுத்துப் பெற்றுள்ளோம்.

இன்று கூட்டணிக் கட்சித் தலைவர்களான காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி, சட்டமன்றக் குழுத் தலைவர் செல்வப்பெருந்தகை உள்ளிட்டோர் மற்றும் காங்கிரஸ் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் கையெழுத்திட்டுள்ளனர். தொடர்ந்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் அனைத்து தலைவர்களையும் சந்திக்க இருக்கிறேன்”

இது தி.மு.க.வின் தனிப்பட்ட பிரச்சினை கிடையாது. ஒட்டு மொத்த மாணவர்களின் கல்வி உரிமை; மருத்துவ உரிமை. நீட் தேர்வு நுழைவால் இதுவரை 22 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

அப்போது அமைச்சர் எ.வ.வேலுவுக்குச் சொந்தமான இடங்களில் நடைபெற்று வரும் வருமான வரித் துறை சோதனை குறித்து அவரிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு, “அது வழக்கமாக நடப்பதுதான். இப்போது காங்கிரஸ் கட்சியில் பல்வேறு அணிகள் இருக்கின்றன. மாணவர் அணி, இளைஞர் அணி, மருத்துவர் அணி என்று பல அணிகள் உள்ளன. அது போல பா.ஜ.க.வின் ஒரு அணிதான் வருமான வரித் துறை. ஐடி, அமலாக்கத்துறை இவையெல்லாம் பா.ஜ.க.வினுடைய அணிகள். அவர்கள் பணியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இதை சட்டப்படி சந்திப்போம்”

“தேர்தல் நெருங்குவதால் மிரட்டும் வகையில் இதுபோன்ற சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா?” என்ற கேள்விக்குப் பதிலளித்த அவர், “கடந்த இரண்டு மூன்று மாதங்களாகவே, பா.ஜ.க. அணிகளின் இதுபோன்ற செயல்பாடுகள் அதிகமாக இருக்கின்றன” என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கூறினார்.

## 4 ஆண்டுகள் ஆகியும் பணிகள் தொடங்கவில்லை - ஆனால்

# மதுரை எய்ம்ஸ் பேராசிரியர்களுக்கு நேர்முகத் தேர்வு!

மதுரை, நவ.5-

பிரதமர் மோடி அடிக்கல் நாட்டி 4 ஆண்டுகள் ஆகி பணிகள் தொடங்கப்படாமல் சுற்றுச்சுவர் மட்டுமே கட்டப்பட்ட மதுரை எய்ம்ஸ்க்கு பேராசிரியர்கள், விரிவுரையாளர்களுக்கான நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டுள்ளது.

மதுரை தோப்பூரில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டப்படும் என கடந்த 2018 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். 2023 ஆம் ஆண்டு எய்ம்ஸ் மருத்துவமனை திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டு 4 ஆண்டுகளுக்கு மேலாகியும் கட்டுமானப் பணிகள் துவங்காமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

10 கோடி ரூபாய் செலவில் 5 கிலோ மீட்டருக்கு சுற்றுச்சுவர் மட்டும் கட்டப்பட்டுள்ளது. இதனால் மதுரை எய்ம்ஸ் மருத்துவ மாணவர்கள் ராமநாதபுரம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் படித்து வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு தோப்பூர் காச நோய் மருத்துவமனை வளாகத்தில் எய்ம்ஸ் நிர்வாக அலுவலகம் 2 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டது.

இதனைத்தொடர்ந்து மருத்துவ கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள நிறுவனங்களை தேர்வு செய்ய டெண்டர் விடப்பட்டு, அந்த டெண்டர் பணிகளும் நிறைவடையாமல் உள்ள நிலையில் எய்ம்ஸ் மருத்துவமனைக்கான மருத்துவ பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், நிர்வாக அதிகாரிகளுக்கான நேர்முகத்தேர்வு இயக்குநர் அனுமந்தராவ் தலைமையில் நடைபெற்றது.

இதில், பல்வேறு மாநிலங்களில் இருந்து மருத்துவர்கள் நேரடி தேர்வு மூலமாகவும், ஒரு சில பணியிடங்களுக்கு ஆன்லைன் மூலமாகவும் கலந்து கொண்டனர். கட்டுமானப் பணிகள் குறித்து எந்த அறிவிப்பும் வெளியாகாமல் உள்ள நிலையில் தேர்வு மட்டும் நடத்தப்பட்டுள்ளது அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது.

முடுக்கிவிடப்பட்டது பாஜக தொண்டர் படை



இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 05-11-2023

# ஒட்டுக் கேட்க வைக்கும் பயம்

இந்தியாவில் எதிர்க்கட்சி எம்.பி.க்களின் செல்போன்கள் ஒட்டுக் கேட்கப்படுவதாக ஆப்பிள் நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. ஐபோன் பயன்படுத்தும் எதிர்க்கட்சித் தலைவர்கள், பத்திரிகையாளர்களுக்கு ஆப்பிள் நிறுவனம் அனுப்பியுள்ள செய்தியால் அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது.

**மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி, சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ், காங்கிரஸ் எம்.பி., சசிதரூர், காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் பவன் கேரா, திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி., மகுவா மொய்த்ரா, சிவசேனா கட்சியின் உத்தவ் தாக்கரே பிரிவைச் சேர்ந்த பிரியங்கா சதுர்வேதி, ஆம் ஆத்மி கட்சியின் ராகவ் சத்தா எம்.பி. மற்றும் ராகுல் காந்தி அலுவலகத்தில் பணிபுரியும் 3 பேர் உள்ளிட்டோருக்கு ஆப்பிள் போன் நிறுவனம் இதுபற்றிய எச்சரிக்கைக் குறுஞ்செய்தி அனுப்பியுள்ளது. அரசியல் தலைவர்கள் மட்டுமின்றி மூத்த பத்திரிகையாளர் சித்தார்த் வரதராஜன் உள்ளிட்டோரின் செல்போன்களும் ஒட்டுக் கேட்கப் பட்டுள்ளன.**

'அரசின் ஏற்பாட்டில் செல்போன்கள் ஒட்டுக் கேட்கப்படுவதாக' ஆப்பிள் நிறுவனத்தில் இருந்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் பயன்படுத்தும் ஐ – போன் மற்றும் மின்னஞ்சல்களை அரசின் உதவி பெறும் அமைப்பால் 'ஹேக்' செய்ய முயற்சி செய்யப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பா.ஜ.க.வின் கெட்ட அரசியல் அம்பலமாகி உள்ளது.

ஜனநாயக நாட்டில் சுதந்திரம் பறிக்கப்படுவதாக குற்றம்சாட்டியுள்ள அகிலேஷ், "இப்படி துப்பறிந்து என்ன சாதிக்கப் போகிறீர்கள்?" எனக் கேள்வி எழுப்பியுள்ளார். எதிர்க்கட்சித் தலைவர்களின் செல்போன்கள் ஒட்டுக் கேட்கப்படுவதற்கு கண்டனம் தெரிவித்துள்ள காங்கிரஸ் முன்னணித் தலைவர் ராகுல் காந்தி, "செல்போன் ஒட்டுக்கேட்பது நேர்மையானவர்கள் செய்யும் செயல் அல்ல, குற்றவாளிகள் செய்யும் செயல்" என்று விமர்சித்துள்ளார். "எவ்வளவு ஒட்டுக்கேட்டாலும் எங்களுக்கு அச்சமில்லை" எனவும் அவர் கூறியுள்ளார்.

**எதிர்க்கட்சித் தலைவர்களின் செல்போன்கள் ஒட்டுக் கேட்கப்படுவதாக ஆப்பிள் நிறுவனம் தெரிவித்துள்ள குற்றச்சாட்டு குறித்து விசாரணைக்கு உத்தரவிடப் பட்டுள்ளதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. இப்புகார்கள் குறித்த விசாரணைக்கு ஒத்துழைக்கும்படி ஆப்பிள் நிறுவனத்திற்கும், எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக ஒன்றிய தகவல் தொடர்புத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார். "இதை விட கேலிக்கூத்து இருக்க முடியாது" என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விமர்சித்துள்ளார்கள். குற்றம் சாட்டப்பட்டவர்களே விசாரணை நடத்துவதாகச் சொல்வதை அவர் விமர்சித்துள்ளார்.**

பா.ஜ.க. அரசு மீது இத்தகைய குற்றச்சாட்டுகள் வருவது புதிதல்ல. மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக பெகாசஸ் பூதம் கிளம்பியதை யாரும் மறந்திருக்க முடியாது.

இஸ்ரேலைச் சேர்ந்த என்.எஸ்.ஓ. நிறுவனத்தின் பெகாசஸ் மென்பொருள் மூலம் உலகம் முழுவதும் உள்ள மனித உரிமைப் போராளிகள், பத்திரிகையாளர்கள், தொழிலதிபர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட 50 ஆயிரம் பேரின் செல்போன் தகவல்கள் திருடப்பட்டுள்ளதாக 'தி கார்டியன்', 'வாஷிங்டன் போஸ்ட்' ஆகிய இதழ்கள் செய்தி வெளியிட்டு, 2021 ஆம் ஆண்டு ஜூலையில் அதிர்ச்சியை ஏற்படுத்தியன.

**இந்தியாவைச் சேர்ந்த இணைய தள செய்தி நிறுவனமான 'தி வயர்', இந்தியாவில் 40 பத்திரிகையாளர்கள், 2 மத்திய அமைச்சர்கள் உட்பட 300 பேரின் ஸ்மார்ட்போன் தகவல்கள் திருடப்பட்டதாகத் தெரிவித்தது. இதில் அமைச்சர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள், விஞ்ஞானிகள், மனித உரிமைப் போராளிகள் ஆகியோரது ஸ்மார்ட்போன் எண்களும் அடங்கும். இந்தச் செய்தி வெளியானதும், "நாங்கள் சட்டத்துக்குப் புறம்பாக எதையும் செய்யவில்லை" என்று ஒன்றிய அமைச்சர் அஸ்வினி அப்போது மறுத்தார்.**

"அரசுகளுக்கு மட்டுமே பெகாசஸ் மென்பொருள் விற்கப்பட்டுள்ளது. சீன அரசோ, பாகிஸ்தான் அரசோ இந்தியக் குடிமக்களை உளவு பார்க்க முடியாது. இது தேச பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விவகாரம் என்பதால் நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணை வேண்டும்" என்று எதிர்க்கட்சிகள் அப்போது கோரிக்கை வைத்தன.

"தொலைபேசி ஒட்டுக் கேட்பு புகார் குறித்து நாடாளு மன்றத்தில் உள்துறை அமைச்சர் அமித்ஷா விளக்கம் அளிக்க வேண்டும். இஸ்ரேல் நிறுவனத்துடன் மோடி அரசுக்குத் தொடர்பா? இல்லையா? என்பதுபற்றி விளக்க மளித்தால் நல்லது. இல்லாவிட்டால் அமெரிக்காவின் வாட்டர்கேட் ஊழல் போல இது தலைவலியாக மாறும்" என்று சுப்பிர மணியன் சுவாமியே அப்போது சொன்னார்.

மென்பொருள் விற்பனையில் முறைகேடு, அரங்கேறியதாகக் கூறப்படுவதை மறுத்த என். எஸ்.ஓ. நிறுவனம், "ஜனநாயகம் இல்லாத நாடுகளுக்கு அந்த மென்பொருளை விற்பனை செய்வதால் எழுந்த விமர்சனங்களைப் பொருட்படுத்தத் தேவையில்லை" என்று விளக்கமளித்தது. அதாவது, இவர்கள் யார் போனையும் ஒட்டுக் கேட்பார்கள். அதனை சகித்துக் கொள்வது தான் ஜனநாயகம் என்று இந்தியாவுக்குக் கற்றுக் கொடுக்கப் பார்த்தது அந்த நிறுவனம்!

இதுகுறித்து வழக்கறிஞர் எம்.எல்.சர்மா என்பவர் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார். ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி ஆர்.வி.ரவீந்திரன் தலைமையில் மூவர் குழுவை உச்சநீதிமன்றம் அமைத்தது. இக்குழு 2022 ஆகஸ்ட் 26 அன்று தனது அறிக்கையைத் தாக்கல் செய்தது. அதிலாவது ஏதாவது உண்மை வெளிவந்ததா என்றால் இல்லை. அந்தக் குழு தனது அறிக்கையில், "விசாரணைக்கு ஒன்றிய அரசு ஒத்துழைக்கவில்லை" என்று தெரிவித்தது.

மேலும், அந்தக் குழுவின் அறிக்கை குறித்து உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா , "உளவு மென்பொருள் பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் 29 தொலைபேசிகளில் 5-ல் மட்டுமே உளவு மென்பொருள் இருந்தது. ஆனால், அவையும் பெகாசஸ் உளவு மென்பொருள்தானா என்பது உறுதியாக வில்லை" என்றார்.

'அரசு ஒத்துழைக்கவில்லை' என்று நிபுணர் குழு கூறியதைப் பற்றி உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சுட்டிக் காட்டி கண்டனத்தைத் தெரிவித்தார். "இங்கே எப்படி ஒத்துழைக்க வில்லையோ அதேபோல் அங்கே விசாரணை ஆணையத்திலும் மத்திய அரசு ஒத்துழைக்கவில்லை போல" என்றார். அதற்கு அரசுத் தரப்பு சொலிசிட்டர் ஜெனரல், 'அது பற்றி தனக்குத் தெரியாது' என்று கூறினார். அத்தோடு இந்த வழக்கே கிடப்பில் போடப்பட்டது.

இந்த நிலையில் இப்போது, 'ஆப்பிள் பூதம்' கிளம்பி இருக்கிறது. இது தொடர்பான விசாரணையிலும் உண்மை எதுவும் வெளியில் வரப் போவது இல்லை. ஆனால், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னதைப் போல, 'பா.ஜ.க.வின் தோல்வி பயம்' வெளியில் வந்துள்ளது.

## டெல்லி - நொய்டா பகுதிகளில் காற்று மாசு அதிகரிப்பு!

புதுடெல்லி, நவ. 5–

தலைநகர் டெல்லியில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வாகன பயன்பாடு, அண்டை மாநில எல்லைகளில் எரிக்கப்படும் விவசாய கழிவுகளில் இருந்து வெளியேறும் புகை, கட்டுமான பணிகளால் எழும் புழுதி ஆகியவற்றால் காற்று மாசு அதிகரித்துள்ளது. கடந்த சில நாள்களாக பாதிப்பு அளவு லேசாக மாசு குறைந்திருந்த நிலையில், நேற்று முன்தினம் மீண்டும் அதிகரித்துள்ளது. டெல்லியில் நேற்று முன்தினம் காலை, காற்றின் தரக்குறியீடு அளவு 346 புள்ளிகளாக பதிவாகியிருந்தது. இதனால், வாகன ஓட்டிகளும் அதி காலையில் நடை பயிற்சி மற்றும் உடல்பயிற்சிக்கு சென்ற மக்களும் கடும் சிரமத்துக்கு ஆளாகினர். இதேபோல் நொய்டாவிலும் காற்று மாசு மிகவும் மோசமான நிலையில் உள்ளது. நொய்டாவின் பல்வேறு பகுதிகளிலும் காற்று தரக்குறியீடு 400 புள்ளிகளுக்கும் மேல் பதிவாகி இருந்தது.

இதனால் மூச்சு விடவே பெரும் சிரமமாக இருப்பதாக நொய்டா வாசிகள் தெரிவித்துள்ளனர். டெல்லியில் அதிகரிக்கும் காற்று மாசை கட்டுப்படுத்த புழுதி பறக்கக்கூடும் என சந்தேகிக்கப்படும் பகுதியில் நீர்தெளிப்பு கருவி மூலம் தண்ணீர் தெளிக்கப்பட்டு வருகிறது. இதேபோல் என்.சி.ஆர். எனப்படும் தேசிய தலைநகர பிராந்திய பகுதியில் அத்தியாவசியம் இல்லாத கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள அரசு நிர்வாகம் தடை விதித்துள்ளது.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (03.11.2023) சென்னை முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில், சீனா நாட்டின் ஹாங்சூவில் நடைபெற்ற ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சார்ந்த 7 விளையாட்டு வீரர் – வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகையாக 3 கோடியே 80 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும், ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற 11 விளையாட்டு வீரர் – வீராங்கனைகளுக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் ரூ.22 இலட்சம் காசோலைகளையும் வழங்கி வாழ்த்தினார்.இந்த நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி உடனுள்ளனர்.

### 1.42 லட்சம் விவசாயிகள் பயனடைவர்!

## கரும்பு விவசாயிகளுக்கு ரூ.253.70 கோடி சிறப்பு ஊக்கத்தொகை!

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அறிக்கை!

சென்னை, நவ.5-

சர்க்கரை ஆலைகளுக்கு 2022-2023 அரவைப் பருவத்திற்கு பதிவு செய்து கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத் தொகை வழங்குவதற்காக ரூ. 253.70 கோடி வழங்கி ஆணை வெளியீட்டுள்ளதாக வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவீத்துள்ளார்.

கரும்பு சாகுபடிப் பரப்பினையும் உற்பத்தியையும் அதிகரிப்பதற்காக, அதிக கரும்பு மகசூலுடன், அதிக சர்க்கரைக் கட்டுமானமும் தரக்கூடிய கரும்பு இரகங்களை பிரபலப்படுத்துதல், கரும்பு விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குதல் மற்றும் மானிய விலையில் சொட்டு நீர்ப்பாசனம், கரும்பு அறுவடை இயந்திரங்கள் வழங்குதல் ஆகியவை தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு அரசு, நலிவடைந்து வரும் சர்க்கரை ஆலைகளில் புனரமைப்பு, எத்தனால் உற்பத்தித் திட்டம், இணைமின் திட்டம் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதால் சர்க்கரை ஆலைகளின் திறன் மேம்படுத்தப் பட்டு வருகிறது.

**கரும்பு சாகுபடிப் பரப்பு அதிகரிப்பு!**

கரும்பு விவசாயிகளின் நலனுக்காக அரசு எடுத்த நடவடிக்கைகளினால், 2020 -21 அரவைப்பருவத்தில் 95,000 எக்டராக இருந்த கரும்புப் பதிவு, 2022-23 அரவைப் பருவத்தில் 1,50,000 எக்டராகவும், கரும்பு அரவை 98.66 இலட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து 160.54 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும் அதிகரித்துள்ளது. மேலும் சர்க்கரைக் கட்டுமானம் கடந்த பத்து ஆண்டுகளுக்கு பிறகு 2022 -23 அரவைப் பருவத்தில் 9.27 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.



முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்,

**கரும்புக்கு சிறப்பு ஊக்கத் தொகை!**

2023-24 ஆம் ஆண்டு வேளாண்மை நிதி நிலை அறிக்கையில், 2022-23 அரவைப்பருவத்தில் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய தகுதியுள்ள விவசாயிகளுக்கு டன்னுக்கு ரூ.195/ சிறப்பு ஊக்கத்தொகையாக வழங்கப்படும் என்று அறிவித்தார். ஒன்றிய அரசு 2022 - 23 ஆம் அரவைப் பருவத்திற்கு அறிவித்துள்ள நியாயமான மற்றும் ஆதாய விலையான (Fair and Remunerative Price) ரூ.2821.25/யைக் காட்டிலும் கூடுதலாக மாநில அரசின் சிறப்பு ஊக்கத் தொகையாக டன்னுக்கு ரூ. 195 வழங்கிடும் வகையில், தமிழ்நாடு அரசு ரூ.253.70 கோடி நிதியினை மாநில நிதியிலிருந்து வேளாண்மை உழவர் நலத்துறைக்கு வழங்கி ஆணையிட்டுள்ளது.

சிறப்பு ஊக்கத் தொகையுடன் சேர்த்து டன்னுக்கு ரூ.3016.25/ அரசு வெளியிட்டுள்ள இந்த ஆணையின்படி, தமிழ்நாட்டில் இயங்கி வரும் இரண்டு பொதுத்துறை, 14 கூட்டுறவு மற்றும் 15 தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு 2022-23 அரவைப் பருவத்தில் கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ள நியாயமான மற்றும் ஆதாய விலையான ரூ.2821.25 மற்றும் மாநில அரசின் சிறப்பு ஊக்கத் தொகையாக ரூ.195யையும் சேர்த்து, டன் ஒன்றுக்கு ரூ.3016.25/ கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

2022-23 அரவைப் பருவத்தில் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளின் விபரம் சேகரிக்கப்பட்டு சர்க்கரைத்துறை ஆணையரகத்தால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான மாவட்ட அளவிலான குழுவின் பரிந்துரையின்படி, தகுதியுள்ள விவசாயிகளுக்கு, சிறப்பு ஊக்கத் தொகை வழங்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

கரும்பு விவசாயிகளின் நலனுக்காக ரூ.253.70 கோடி மதிப்பில் தமிழ்நாடு அரசு வழங்கும் சிறப்பு ஊக்கத்தொகையினால் சுமார் 1.42 இலட்சம் கரும்பு விவசாயிகள் பயனடைவார்கள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

### சீனாவில் நடைபெற்ற ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற

## தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர் - வீராங்கனைகளுக்கு ரூ.3.80 கோடி ஊக்கத் தொகை!

### இளைஞர் நலன் - விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, நவ.5–

சீனாவில் நடைபெற்ற ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டை சார்ந்த 7 விளையாட்டு வீரர் - வீராங்கனைகளுக்கு ரூ.3.80 கோடி உயரிய ஊக்கத்தொகையும், போட்டிகளில் பங்கேற்ற 11 விளையாட்டு வீரர் – வீராங்கனைகளுக்கு ரூ.22 இலட்சம் ரூபாயும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.11.2023) சென்னை முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில், சீனா நாட்டின் ஹாங்சூவில் நடைபெற்ற ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டை சார்ந்த 7 விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகையாக 3 கோடியே 80 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும், ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற 11 விளையாட்டுவீரர் வீராங்கனைகளுக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் 22 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும் வழங்கி வாழ்த்தினார்.

சீனா நாட்டின் ஹாங்சூவில் கடந்த 22.10.2023 முதல் 28.10.2023 வரை நடைபெற்ற ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் இந்திய அணி சார்பில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 18 விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர். இதில் 7 விளையாட்டு வீரர் வீராங்கனைகள் 2 தங்கம், 2 வெள்ளி மற்றும் 11 வெண்கலம் என மொத்தம் 15 பதக்கங்களை வென்றனர்.

ஆசிய பாரா விளையாட்டுப் போட்டியில் பதக்கங்களை வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த – பாரா தடகளப் போட்டியில் 1 தங்கப் பதக்கம் வென்ற டி.சோலைராஜ், 1 வெள்ளிப் பதக்கம் வென்ற டி. மாரியப்பன் மற்றும் 2 வெண்கலப் பதக்கங்கள் வென்ற முத்துராஜா, பாரா பேட்மிண்டன் போட்டியில் 1 தங்கம், 1 வெள்ளி மற்றும் 1 வெண்கலப் பதக்கங்கள் வென்ற எம். துளசிமதி, 3 வெண்கலப் பதக்கங்கள் வென்ற மனிஷா ராமதாஸ், 2 வெண்கலப் பதக்கங்கள் வென்ற சிவராஜன் சோலைமலை, 3 வெண்கலப் பதக்கங்கள் வென்ற எஸ். நித்யா ஸ்ரீ சுமதி ஆகியோருக்கு உயரிய ஊக்கத் தொகையாக 3 கோடியே 80 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

மேலும், ஆசிய பாரா விளையாட்டுப் போட்டியில் பங்கேற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த முத்து மீனா, பி.மனோஜ், மனோஜ் குமார், ஷேக் அப்துல்காதர், ஆர். பாலாஜி, ஷிரந்தி தாமஸ், ஆர். ருத்திக், வி. சந்தியா, ஆர். கனிஷ்ஸ்ரீ பிரேமா, ஷரோன் ரேச்சல் அபி மற்றும் ஆர். கஸ்தூரி ஆகிய 11 விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை" சார்பில் தலா 2 இலட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 22 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, முதன்மை நிர்வாக அலுவலர் வே.மணிகண்டன் மற்றும் பொது மேலாளர் திருமதி. மெர்ஸி ரெஜினா ஆகியோர் கலந்து கொண்டனர்.

**ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற வீரர்களுக்கு வரவேற்பு**

சீனாவில் நடைபெற்ற ஆசிய பாரா விளையாட்டு போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 7 வீரர் வீராங்கனைகள் மற்றும் பயிற்றுநர்கள் நேற்று (03.11.2023) காலை சென்னை, மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு வருகை தந்தனர். அவர்களுக்கு தமிழ்நாடு அரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.



சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையத்தில் வருகின்ற டிசம்பர் 17 ஆம் தேதி கழக மாநில இளைஞரணி மாநாடு நடைபெறும் இடத்தில் கட்சி அலுவலகத்தை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார். இதில் எஸ்.ஆர்.சிவலிங்கம், எம்.எல்.ஏ. ஆர்.ராஜேந்திரன், டி.எம்.செல்வகணபதி, தடங்கம் சுப்பிரமணி, எஸ்.ஆர்.பார்த்திபன் உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக நடப்போம் நலம் பெறுவோம் திட்டத்தின் கீழ் 8 கி.மீ சுகாதார நடைபயிற்சியினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் புதுக்கோட்டை முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதி மாவட்ட விளையாட்டரங்கிலிருந்து சுகாதார நடைபயிற்சியினை கொடியசைத்து துவக்கி வைத்தனர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், புதுக்கோட்டை நகர்மன்றத் தலைவர் திருமதி. திலகவதி செந்தில், துணை இயக்குநர்கள் (சுகாதாரப்பணிகள்) மரு.ராம்கணேஷ் (புதுக்கோட்டை), மரு.நமச்சிவாயம் (அறந்தாங்கி), மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



நடப்போம் நலம் பெறுவோம் என்ற நோக்கில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக நடைப்பயிற்சியை துவங்கி வைத்தார்கள். அதன் நிகழ்வாக திருப்பூர் தெற்கு மாவட்டம், காங்கேயம் தெற்கு ஒன்றியம், சிவன்மலையில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நடைப்பயிற்சியை (Health Walk) தொடங்கி வைத்தார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிருஸ்துராஜ், மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி.கிரியப்பனார், தெற்கு மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன், வடக்கு மாநகர கழக செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் உள்பட மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொதுமக்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.

கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் - புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில்

# கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில் கவிதைகள் ஒப்பித்தல் போட்டி!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் வாழ்த்துரை!

புதுக்கோட்டை, நவ.5-

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை நடத்தும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பள்ளி மாணவ - மாணவியருக்கான முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் கவிதைகள் திரைப்பட வசனங்கள் ஒப்புவித்தல் போட்டி நாளை (6.11.2023, திங்கட்கிழமை) காலை 9 மணி முதல் புதுக்கோட்டை டவுன் ஹாலில், புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் நடைபெறுகிறது.

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட அமைப்பாளர் செந்தாமரை பாலு வரவேற்புரையாற்றுகிறார்.

ஆ.செந்தில், அரு.வீரமணி, எஸ்.எஸ்.கருப்பையா, க.மதியழகன்,பி. ராஜேஸ்வரி, எம்.லியாகத் அலி, ஜெ.அஸ்ரப் அலி, சிப்காட் சந்திரசேகர், பி.டி.ரவி, கே.சண்முகம் மலையூர் சத்யா, கோ.மதியழகன், கந்தர்வக்கோட்டை முருகையா, பாடகர் இளையராஜா, பாடகர் முத்து முகம்மது ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சிறப்பு அழைப்பாளராக, பார்வையாளராக கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாநில துணைச் செயலாளர், மண்டல பொறுப்பாளர் திருச்சி எழில்மாறன் செல்வேந்திரன் கலந்து கொள்கிறார்.

சட்டம் மற்றும் நீதித் துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளருமான எஸ். ரகுபதி, சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள். மேலும் இந்நிகழ்வுகளில் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் பெரியண்ணன் அரசு , மாநிலங்களவை உறுப்பினர் எம். எம்.அப்துல்லா, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், த.சந்திரசேகரன், புதுக்கோட்டை விஜயா பி.டி.அரசக்குமார், அஞ்சுகா மீனாட்சிசுந்தரம், சுப.சரவணன், செ.அசோக் பாண்டியன், வி.என்.மணி, கே.ஆர்.என்.போஸ், கீரை. தமிழ்ராஜா, சு.சண்முகம், மு.க.ராமகிருஷ்ணன் ஆர். ஆர்,சாமிநாதன், தவ.பாஞ்சாலன், வெ.முத்துகிருஷ்ணன், எம்.பரமசிவம், மா. தமிழ் அய்யா, என்.சேட்டு,

சி.சண்முகம், ஓ.எஸ். வெங்கடாசலம், கே.எஸ். சந்திரன், ஆர்.ஆர்.எஸ். மாரிமுத்து, மு.பி.ம. சத்தியசீலன், கே.பி.அய்யப்பன், அ.இளங்குமரன், திலகவதி செந்தில், ஜெயலெட்சுமி தமிழ்ச்செல்வன், பெ.சின்னையா, காமு மு.பி.மணி, மாலா ராஜேந்திரதுரை, உ.முருகேசன், ஜெயமீரா ரவிக்குமார், சகுந்தலா வைரவன், தென்னலூர் எம். பழனியப்பன், எம்.செந்தில் குமார், என்.சாத்தையா, இராசு.சந்தோஷ், ஆர்.செல்லத்துரை , சி.ஆர், வி.சித்ரா, உரக்கடை எம்.கருப்பையா, மஜீத் முபாரக், எம்.சுப்பையா, டாக்டர் செ.குறிஞ்சிவாணன், டி.எம்.ஆர்.ராமமூர்த்தி, வே.ராஜேஷ், ச.இளையசூரியன், டாக்டர் மு.க. முத்துக்கருப்பன், என். வீரய்யா, வி.ஜி.ஆர்.மணி வண்ணன், வி.என்.எம்.பாலமுருகன், பொன்.பாரிவள்ளல், டி.சூசைராஜ், எம். ராஜா, க.கவிவேந்தன், எஸ். வி.ஆர்.ஸ்டாலின், தவசுமணி, அ.பிரபா, ஆர்.டி. ராமசாமி,கே.கணபதி, அ. ரெத்தினம், எம்.வேலுச்சாமி, இராம.செல்வராஜ், ஜெ.அஸ்ரப் அலி, சி.அரங்கநாயகம், டி.சி.ஆர்.ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

முடிவில் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாவட்ட துணைத் தலைவர் கி.சுப்பிரமணியன் நன்றி கூறுகிறார்.

வேளாண்மைத் துறையில் டி.என்.பி.எஸ்.சி. மூலம் தேர்வு செய்யப்பட்ட

# 213 பேருக்கு பணி நியமன ஆணைகள்!

## அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வழங்கினார்!

சென்னை, நவ.4-

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே. பன்னீர்செல்வம் நேற்று முன்தினம் (03.11.2023) வேளாண்மை ஆணையரகத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 213 தெரிவாளர்களில் 30 சுருக்கெழுத்து தட்டச்சர் (தரம் 3) மற்றும் 183 தட்டச்சர்களுக்கு பணி நியமன ஆணையையும், 2021-2022 ஆண்டில் மாநில அளவிலான பயிர் விளைச்சல் போட்டியில் அதிக மகசூல் பெற்ற 18 விவசாயிகளுக்கு பரிசுகள் வழங்கியும், பூச்சிக் கொல்லி அமலாக்க மேலாண்மை தகவல் இணையதளத்தை தொடங்கியும் வைத்தார்.

தமிழ்நாடு அரசு, விவசாயிகளின் நலனிற்காக பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, இத்திட்டங்கள் விவசாயிகளை சென்றடைவதற்கு போதிய தொழில்நுட்ப அலுவலர்களையும், நிர்வாகப் பணியாளர்களையும் நியமனம் செய்து வருகிறது. அந்த வகையில் 30 சுருக்கெழுத்துத் தட்டச்சர் (தரம்3) மற்றும் 183 தட்டச்சர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது.

விவசாயிகள், வேளாண்மை உழவர் நலத்துறை வழங்கி வரும் தொழில்நுட்பங்களை சரிவர கடைப்பிடித்து, அதிக மகசூல் பெறுவதை ஊக்குவிப்பதற்கு பயிர் விளைச்சல் போட்டியை நடத்தி வருகின்றது.

2021-22ஆம் ஆண்டு நிலக்கடலை, பருத்தி, கரும்பு, மக்காச்சோளம், சோளம், கம்பு, துவரை, பச்சைப்பயிறு, மற்றும் உளுந்து பயிர்களில் மாநில அளவில் முதல் மற்றும் இரண்டாம் பரிசு பெற்ற 18 விவசாயிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

பூச்சிக்கொல்லி மருந்து உற்பத்தி ஆலைகள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து விற்பனை நிலையங்களுக்கு உரிமங்களை எளிய முறையில் இணையதளம் மூலம் பெறுவதற்கு, பூச்சிக்கொல்லி உற்பத்தி மற்றும் விற்பனை உரிமம் மேலாண்மை இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், நீண்ட இழைப் பருத்தி சாகுபடி பரப்பினை அதிகரித்து விவசாயிகளுக்கு அதிக இலாபம் கிடைத்திடவும் தமிழ்நாட்டில் உள்ள நூற்பாலைகளுக்குத் தேவையான தரமான பருத்திப் பொதிகளை கிடைத்திடவும் தென்னிந்திய நூற்பாலைகள் அசோசியேசன் (SIMA) மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகத்தின் விஞ்ஞானிகள் வேளாண் துறை சார்ந்த அலுவலர்களுடன் ஒரு கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டு தமிழ்நாட்டின் பருத்தி சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தியினை அதிகரித்திட உரிய கருத்துரு அரசுக்கு அனுப்பிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து வரும் நிலையில், விவசாயிகள் பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் சம்பா நெல் மற்றும் இதர பயிர்கள் நவம்பர் 15 ஆம் தேதிக்குள் காப்பீடு செய்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் சில மாவட்டங்களில் மழைப் பொழிவு குறைவாக உள்ள நிலையில் விவசாயிகள் விதைப்பு மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. இவ்விவசாயிகளும் இத் திட்டத்தின்கீழ் பதிவு செய்து கொள்வதன் மூலம் விதைப்பு செய்ய இயலாமை என்னும் இடர் நிகழ்வின் கீழ் இழப்பீட்டு தொகை பெற இயலும்.

இவ்விழாவில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச்செயலாளர் செல்வி அபூர்வா, வேளாண்மை ஆணையர் முனைவர் இல. சுப்பிரமணியன், வேளாண்மை கூடுதல் இயக்குநர் (பணி மேலாண்மை), திருமதி. ஸ்ரேயா பி.சிங், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் இரா.பிருந்தா தேவி, தலைமைப் பொறியாளர் (வே.பொ) ஆர். முருகேசன் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நாமக்கல் மாவட்டத்திற்கு தனியாக மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஏற்படுத்திட அனுமதி வழங்குக!

## மும்பை நபார்டு வங்கியில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. கோரிக்கை!

நாமக்கல், நவ.5-

நாமக்கல் மாவட்டத்திற்கு தனியாக மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஏற்படுத்திட அனுமதி வழங்க வேண்டும் என மும்பை நபார்டு வங்கியில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி கோரிக்கை விடுத்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்திற்கு தனியாக மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஏற்படுத்திட அனுமதி வழங்குமாறு நபார்டு வங்கி மும்பை முதன்மை பொது மேலாளர் சுதிர் ராய் - ஐ சந்தித்து நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கடிதம் வழங்கியுள்ளார்.

இக்கடிதத்தில் 1996 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்திலிருந்து நாமக்கல் வருவாய் மாவட்டம் பிரிக்கப்பட்டது, நாமக்கல் மாவட்டத்தில் ஏராளமான பால் பண்ணை மற்றும் கோழிப் பண்ணைகள் உள்ளன என்பதையும், இம்மாவட்டத்தில் உள்ள பெரும்பான்மையான மக்கள் மேற்கண்ட பணிகளில் ஈடுபட்டுள்ளனர் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், நாமக்கல் மாவட்டத்தில் 1000 க்கும் மேற்பட்ட பல்வேறு கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. விவசாயக் கடன் சங்கம், பால் பண்ணை சங்கம், கைத்தறி நெசவாளர் சங்கங்கள். சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில், நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு சங்கங்கள் மற்றும் பொதுமக்களிடம் இருந்து, 1000 கோடி ரூபாய் டெபாசிட் செய்யப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நாமக்கல் மாவட்டம் உருவாக்கப்பட்டு 25 ஆண்டுகளுக்கும் மேலாகி விட்ட நிலையில், நாமக்கல் மாவட்டத்திற்கென தனியாக மத்திய கூட்டுறவு வங்கி இல்லை.

தற்போது, நாமக்கல் மாவட்டத்திற்கு புதிய மத்திய கூட்டுறவு வங்கி தொடங்குவதற்கான சாத்தியக்கூறு ஆய்வுக்காக தமிழக அரசு, கூட்டுறவு சங்கப் பதிவாளர் குழுவை அமைத்துள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேற்கண்ட குழுவில் நபார்டு வங்கியின் பிரதிநிதியும் உறுப்பினராக உள்ளார். நாமக்கல் மாவட்டம் தொழில் துறையில் அதிக திறன் கொண்டதோடு, மாநிலத்தில் வேகமாக வளரும் மாவட்டமாகவும் உள்ளது.

மேலும், நாமக்கல் மாவட்டத்திற்கான இங்கு செயல்படும் சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி போல் முழுத் திறனுடன் புதிதாக தொடங்கப்படும் மத்திய கூட்டுறவு வங்கியும் ஸ்திரமாகச் செயல்படும்.

தற்போது, இந்திய அரசின் கூட்டுறவு அமைச்சகம், வணிகர்கள், சிறு வணிகர்கள் மற்றும் விவசாயி களை மேம்படுத்துவதற்காக நாடு முழுவதும் புதிய கூட்டுறவு சங்கங்கள்/வங்கிகள் நிறுவப் படும் என்று புதிய கொள்கையை உருவாக்கியுள்ளது.

இந்த தருணத்தில். தமிழ்நாட்டில் நாமக்கல் மாவட்டத்திற்கு தனியாக ஒரு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியை நிறுவுவதற்கு அனுமதி வழங்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன் என அம்மனுவில் குறிப்பிட்டுள்ளார்.



நாமக்கல் மாவட்டத்திற்கு தனியாக மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஏற்படுத்திட அனுமதி வழங்குமாறு மும்பை நபார்டு வங்கி முதன்மை பொது மேலாளர் சுதிர் ராயை நேரில் சந்தித்து நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கடிதம் வழங்கினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வண்ணை தேவகி

**நவம்பர் 5 (2009)**



பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரது கொள்கைப் பற்றாலும், பேச்சாற்றலாலும் தன்னலம் கருதாத் தியாகத்தாலும் ஈர்க்கப்பட்டு, இளம் வயதிலேயே கழக மேடைகளில் உரையாற்றியவர்.

கழகம் நடத்திய போராட்டங்களில் எல்லாம் பங்கேற்று பலமுறை சிறை சென்றுள்ளார்.

கழக மகளிர் அணியின் செயலாளராகவும், துணைத் தலைவராகவும், இணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து வந்தவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, மாநகராட்சி சுகாதாரநிலைக்குழுவின் தலைவராக திறம்பட பணியாற்றியவர்.

முதல்வர் கலைஞர் அவர்கள் 1999ஆம் ஆண்டு தமிழக அரசின் சார்பில் 'அம்பேத்கர் விருது' வழங்கி சிறப்பித்தார்.

"கழகம், கழகம் என்று தன் வாழ்நாள் முழுவதையும் கழகத்திற்காகவே செலவழித்து, அவர் பேசாத கிராமங்களே இல்லையென்ற அளவிற்கு, கழகப் பிரச்சாரத்தில் தன் இளம் பிராயத்திலிருந்து ஈடுபட்டவர்" என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோவை மு. சுலைமான்

**நவம்பர் 5 (1983)**



தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

கோவை மாவட்டக் கழக பிரதிநிதியாக பொறுப்பு வகித்தவர்.

நெருக்கடி காலத்தில் மிசா சட்டம் அமல்படுத்தப்பட்ட போதும், தைரியமாக முரசொலி முகவராக பணியாற்றியவர்.

கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இயக்குனராக பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## 2-வது மாநில மாநாட்டுக் குழுக்கள்
## கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு

**திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாடு வரும் டிசம்பர் 17-ஆம் தேதி சேலத்தில் நடைபெற உள்ளது. மாநாட்டுப் பணிகளை ஒருங்கிணைப்பதற்காக இளைஞர் அணி நிர்வாகிகளைக் கொண்ட குழுக்கள் கீழ்க்கண்டவாறு அமைக்கப்படுகின்றன. இந்தக் குழுக்கள் அதற்குரிய பணிகளை மேற்கொள்வதற்கு கழக நிர்வாகிகள் அனைவரும் ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

### வரவேற்புக் குழு

**செயலாளர் :**

எஸ்.ஜோயல், மாநிலத் துணைச் செயலாளர்

**ஒருங்கிணைப்பாளர்கள் :**

வீரபாண்டி டாக்டர் ஆ.பிரபு, அமைப்பாளர், சேலம் கிழக்கு மாவட்டம்.
மு.மணிகண்டன், அமைப்பாளர், சேலம் மேற்கு மாவட்டம்.
செள.அருண்பிரசன்னா, அமைப்பாளர், சேலம் மத்திய மாவட்டம்.
கேபிள் ச.சரவணன் (எ) சத்யகுமார், அமைப்பாளர், சேலம் மாநகரம்.

**உறுப்பினர்கள் :**

சி.சிவராமன், சு.சதீஷ்குமார், த.நடராஜன், சேலம் கிழக்கு மாவட்டம்.
மு.இப்ராஹிம், மா.இளஞ்செழியன், சேலம் மத்திய மாவட்டம்.
க.பிரபுகண்ணன், பெ.மகேந்திரன், சேலம் மேற்கு மாவட்டம்.
ம.கலைச்செல்வன், சிலம்பம் எஸ்.கோபி, சேலம் மாநகரம்.
மாவட்ட - மாநகரத் துணை அமைப்பாளர்கள்.

### பந்தல் குழு

**செயலாளர் :**

ந.ரகுபதி (எ) இன்பா ஏ.என்.இரகு, மாநிலத் துணைச் செயலாளர்.

**ஒருங்கிணைப்பாளர்கள் :**

இமயம் சசிகுமார், அமைப்பாளர், நீலகிரி மாவட்டம்.
ம.கிரண், அமைப்பாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்டம்.
டி.எம்.எஸ்.முகேஷ், அமைப்பாளர், தென்காசி வடக்கு மாவட்டம்.
க.அன்பழகன், அமைப்பாளர், திருச்சி மேற்கு மாநகரம்.

**உறுப்பினர்கள் :**

பூக்கடை சுந்தர், நாமக்கல் மேற்கு மாவட்டம்.
செ.துரைராஜ், கடலூர் மேற்கு மாவட்டம்.
ப.ஜெகதீஷ், சென்னை கிழக்கு மாவட்டம்.
மு.முகமது ஜுனைத், திருப்பூர் வடக்கு மாவட்டம்.
கோ.ரவிசங்கர், திண்டுக்கல் மேற்கு மாவட்டம்.
மு.கா.கார்த்தி, தஞ்சாவூர் மத்திய மாவட்டம்.
மாவட்டத் துணை அமைப்பாளர்கள்.

### பொது இருக்கை வசதி கண்காணிப்புக் குழு

**செயலாளர் :**

நா.இளையராஜா, மாநிலத் துணைச் செயலாளர்.

**ஒருங்கிணைப்பாளர்கள் :**

ஏ.எஸ்.ஹரிஹரசுதன், அமைப்பாளர், திண்டுக்கல் மேற்கு மாவட்டம்.
வெங்கமேடு சக்திவேல், அமைப்பாளர், கரூர் மாவட்டம்.
கோல்டு டி.பிரகாஷ், அமைப்பாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்.
க.அருண் சுந்தர், அமைப்பாளர், தூத்துக்குடி மாநகரம்.

**உறுப்பினர்கள் :**

லயோலா கே.மதன், சென்னை வடக்கு மாவட்டம்.
எஸ்.ராஜேஷ், கடலூர் மேற்கு மாவட்டம்.
செ.கார்த்திகேயன், ஈரோடு வடக்கு மாவட்டம்.
மணலூர் கே.எம்.பொற்கோ, சிவகங்கை மாவட்டம்.
ஆர்.ராஜேஷ்கண்ணா, தஞ்சாவூர் மத்திய மாவட்டம்.
ம.அசோக்குமார், திருப்பூர் தெற்கு மாநகரம்.
மாவட்ட - மாநகரத் துணை அமைப்பாளர்கள்.

### வாகனக் கட்டுப்பாட்டுக் குழு

**செயலாளர் :**

ப.அப்துல் மாலிக், மாநிலத் துணைச் செயலாளர்.

**ஒருங்கிணைப்பாளர்கள் :**

ஜெ.திருவாசகம், அமைப்பாளர், ஈரோடு தெற்கு மாவட்டம்.
ஆர்.டி.மதன்குமார், அமைப்பாளர், சென்னை வடகிழக்கு மாவட்டம்.
ஜி.கே.எம்.ராஜா, அமைப்பாளர், தஞ்சாவூர் வடக்கு மாவட்டம்.
கே.சம்பத்ராஜா, அமைப்பாளர், இராமநாதபுரம் மாவட்டம்.

**உறுப்பினர்கள் :**

ஜெ.மோகன்பாபு, திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்.
வ.இளம்பரிதி, நாமக்கல் கிழக்கு மாவட்டம்.
செ.ராஜசேகரன், திருப்பூர் வடக்கு மாவட்டம்.
பி.ரவீந்திரன், திருச்சி தெற்கு மாவட்டம்.
ஆர்.சேதுபதிராஜா, சிவகங்கை மாவட்டம்.
ஜெ.ஜெ.மருதுராஜா, மதுரை வடக்கு மாவட்டம்.
மாவட்டத் துணை அமைப்பாளர்கள்.

### நிதிக்குழு

**செயலாளர் :**

கே.இ.பிரகாஷ், மாநிலத் துணைச் செயலாளர்.

**ஒருங்கிணைப்பாளர்கள் :**

கே.வி.கே.எஸ்.சபரி கார்த்திகேயன், அமைப்பாளர், கோயம்புத்தூர் தெற்கு மாவட்டம்.
டி.ஆர்.கிருஷ்ணராஜா, அமைப்பாளர், தென்காசி தெற்கு மாவட்டம்.
எம்.ஜி.எஸ்.வெங்கடேஷ்வரன், அமைப்பாளர், தருமபுரி கிழக்கு மாவட்டம்.
திராவிடப் பண்ணை மு.இர.முத்துதீபக், அமைப்பாளர், திருச்சி கிழக்கு மாநகரம்.

**உறுப்பினர்கள் :**

கே.பி.திருமலைராஜ், கோயம்புத்தூர் மாநகர் மாவட்டம்.
டி.கே.பி.ரமேஷ், விழுப்புரம் வடக்கு மாவட்டம்.
ஜே.எம்.ஹெச்.இம்ரான் ஆருண், சென்னை மேற்கு மாவட்டம்.
சு.பாபு, விருதுநகர் தெற்கு மாவட்டம்.
டி.ஆர்.சிவசங்கர், பெரம்பலூர் மாவட்டம்.
ஏ. ஆர்.பி.அழகிரி, தஞ்சாவூர் தெற்கு மாவட்டம்.
மாவட்டத் துணை அமைப்பாளர்கள்.

### பேச்சாளர் ஒருங்கிணைப்புக் குழு

**செயலாளர் :**

க.பிரபு, மாநிலத் துணைச் செயலாளர்.

**ஒருங்கிணைப்பாளர்கள் :**

வி.பி.தாகப்பிள்ளை, அமைப்பாளர், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம்.
த.மணிராஜன், அமைப்பாளர், புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்.
பி.என்.கார்த்திக், அமைப்பாளர், நாகப்பட்டினம் மாவட்டம்.
இரா.ராஜா, அமைப்பாளர், அந்தமான் நிகோபார் தீவுகள்.

**உறுப்பினர்கள் :**

ஜெ.பாலமுருகன், சென்னை கிழக்கு மாவட்டம்.
வி.எஸ்.அலெக்ஸாண்டர், கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம்.
கே.சையத் நாஸிர் அஹமது, ஈரோடு வடக்கு மாவட்டம்.
த.சசிகுமார், திருப்பூர் வடக்கு மாவட்டம்.
சி.கே.குமரகுரு, இராமநாதபுரம் மாவட்டம்.
மு.இளஞ்சேரன், புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்.
மாவட்டத் துணை அமைப்பாளர்கள்.

### மேடை நிர்வாகக் குழு

**செயலாளர் :**

பி.எஸ்.சீனிவாசன், மாநிலத் துணைச் செயலாளர்.

**ஒருங்கிணைப்பாளர்கள் :**

ராஜா அன்பழகன், அமைப்பாளர், சென்னை தென்மேற்கு மாவட்டம்.
ஆதி.ராஜேஷ்வரன், அமைப்பாளர், தஞ்சாவூர் தெற்கு மாவட்டம்.
த.சுமன், அமைப்பாளர், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம்.
அ.அப்துல் ரஹ்மான், அமைப்பாளர், திண்டுக்கல் மாநகரம்.

**உறுப்பினர்கள் :**

வாளாடி.இ.கார்த்திக், திருச்சி மத்திய மாவட்டம்.
மீஞ்சூர் எம்.முரளிதரன், திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்.
ஏ.எம்.மதியழகன், கடலூர் கிழக்கு மாவட்டம்.
பி.என்.சி.மகேஷ்குமார், தருமபுரி மேற்கு மாவட்டம்.
கே.இ.நெளபல், நீலகிரி மாவட்டம்.
ப.வெற்றிச்செல்வன், மதுரை வடக்கு மாவட்டம்.
மாவட்டத் துணை அமைப்பாளர்கள்.

### உணவுக் கூடங்கள், கடைகள் கண்காணிப்புக்குழு

**செயலாளர் :**

ஜி.பி.ராஜா (எ) பிரதீப் ராஜா, மாநிலத் துணைச் செயலாளர்.

**ஒருங்கிணைப்பாளர்கள் :**

டி.லோகேஷ், அமைப்பாளர், சென்னை கிழக்கு மாவட்டம்.
அ.யுவராஜ், அமைப்பாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்.
ஆர்.செளந்தர்ராஜன், அமைப்பாளர், மதுரை மாநகர் மாவட்டம்.
எம்.எஸ்.ஆர்.ராஜ் (எ) மணிகண்ட பிரபு, அமைப்பாளர், திருப்பூர் தெற்கு மாநகரம்.

**உறுப்பினர்கள் :**

கே.குட்டி [எ] சுப்ரமணி, சென்னை மேற்கு மாவட்டம்.
எஸ்.என்.ஆர்.உதயகுமார், விழுப்புரம் வடக்கு மாவட்டம்.
டி.எஸ்.அசோக், நாகப்பட்டினம் மாவட்டம்.
வே.சூரியன்தம்பி, கோயம்புத்தூர் வடக்கு மாவட்டம்.
பாசறை ஆர்.ஆனந்த், விருதுநகர் தெற்கு மாவட்டம்.
மாவட்டத் துணை அமைப்பாளர்கள்.

### தீர்மானக்குழு

**செயலாளர் :**

சி.ஆனந்தகுமார், மாநிலத் துணைச் செயலாளர்.

**ஒருங்கிணைப்பாளர்கள் :**

திருப்பூர் ஈ.தங்கராஜ், அமைப்பாளர், திருப்பூர் வடக்கு மாவட்டம்.
பை.மு.ராமஜெயம், அமைப்பாளர், தூத்துக்குடி தெற்கு மாவட்டம்.
அ.அசார் [எ] வாசிம் ராஜா, அமைப்பாளர், தஞ்சாவூர் மாநகரம்.
ந.வசந்தகுமார், அமைப்பாளர், மும்பை மாநிலம்.

**உறுப்பினர்கள் :**

டி.கே.பாபு, திருவள்ளூர் மேற்கு மாவட்டம்.
வி.எஸ்.முரளி, இராணிப்பேட்டை மாவட்டம்.
த.சசிகுமார் (எ) ஞானசிகாமணி, திருப்பூர் வடக்கு மாவட்டம்.
ஜெ.சுபையர் அகமது, மயிலாடுதுறை மாவட்டம்.
க.பிரதீப், தூத்துக்குடி வடக்கு மாவட்டம்.
பா.விக்னேஷ் குமார், கோவை வடக்கு மாவட்டம்.
மாவட்டத் துணை அமைப்பாளர்கள்.

### கழக முன்னணியினர் இருக்கை வசதி அமைப்புக் குழு

**செயலாளர் :**

சி.என்.அண்ணாதுரை, எம்.பி., அமைப்பாளர், திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்.

**ஒருங்கிணைப்பாளர்கள் :**

கே.வி.லோகேஷ், அமைப்பாளர், திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்.
எம்.எஸ்.கணேஷ்குமார், அமைப்பாளர், கடலூர் மேற்கு மாவட்டம்.
